மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இவ்வளவு முக்கியமான ஒரு பிரச்சினைக்கு ஒரு தனிக் கேள்வி எழுப்பியிருக்கலாம் ; அதிலே உறுப்பினர் தவறி விட்டதற்காக நான் வருந்துகிறேன்.

பெண்களுக்கான தனிப் பேருந்துகள்

*10369—**திருமதி பாப்பா உமாநாத் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, மவுண்ட் ரோடு பகுதியிலிருந்து அலுவலகப் பணி நேரங்களில் பெண்களுக்கான தனிப் பேருந்துகள் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே:

(அ) சென்னை அண்ணா சாலைப் பகுதியில் பணி புரிகின்ற மகளிர்களுக்காக தற்போது பல்லவன் போக்கு வரத்துக் கழகம் பல்வேறு இடங்களிலிருந்து அண்ணா சாலை வழியாக காலையில் 15 வழித் தடங்கள் மூலம் 15 பயண நடைகளும், மாலையில் 16 வழித் தடங்களில் 18 பயண நடைகளும் மகளிர் பேருந்தாக இயக்கி வருகின்றது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் கூடுதலாக வேண்டுமென்று கேட்கப் பட்டது. நான் கேள்வி கேட்ட நேரம் நீண்டகாலத்திற்கு முன்பு என்று நினைக்கிறேன். ஆகவே, அமைச்சரவர்கள் வளைகுடாவைக் காரணம் காட்டாமல், ஓடிக்கொண்டிருப்பதைப் பற்றிச் சொன்னதற்கு மிகவும் நன்றி. ஆனால், வருங்காலத்திலும், பெண்கள், குழந்தைகள், சிறுவர்களுக்கான பேருந்துகள் எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் தொடர்ந்து விடப்பட வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவை விடப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தற்போது எந்த நெருக்கடி காரணமாகவும், பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், வார நாட்களில் பேருந்துகள் நிறுத்தப்படவில்லை. ஏற்கனவே செய்தித் பத்திரிகைகளிலே வந்துள்ளதைப்போல ஞாயிற்றுக்கிழமை மட்டுப் தான் பாதியாகப் பேருந்துகள் குறைக்கப்பட்டு இருக்கின்றன.

1991 சனவரி 21]

அலுவலகத்திலே பணிபுரிகின்ற மகளிருக்காகவும், அதே போலக் கல்லூரிக்குச் செல்லுகின்ற மாணவியர்களுடைய வசதிக்காகவும், குழந்தைகளுடைய வசதிக்காகவும் தனிப் பேருந்துகள் ஏற்கனவே ஓடிக்கொண்டிருப்பது எந்த வகையிலேயும் குறைக்கப்படவில்லை. தொடர்ந்து அவைகள் குறையாமல் நிறைவு பெற நடந்து கொண்டிருக்கும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விடக்கூடிய பேருந்துகளில் பின்பகுதி இருக்கையை எடுத்துவிட்டு, பெண்கள் நிற்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கையிலே பை போன்ற பொருட்களை வைத்துக்கொண்டு, மேலே பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பின் இருக்கையை வைத்து, நிற்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பயணிகளுடைய நெருக்கடி மிகுந்திருக்கக் கூடிய வழித் தடங்களில் மட்டும்தான் பின்னிருக்கைகள் எடுக்கப்பட்டு, அந்தக் கூட்டத்தைச் சமாளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மகளிர் பேருந்துகளில் அப்படி பின்னிருக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பது தெரியவில்லை. அறிந்து, அதற்கான பதிலைச் சொல்லலாம்.

9-30 மணி

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரங்களில் ஓடக்கூடிய பஸ்களில் பின் இருக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மஃபஸலில் ஓடக்கூடிய பஸ்கள் இருக்கிறதே, அதிலே அறுபது சீட்டுகள் ; அந்த அறுபது சீட்டுகளிலும் எல்லாவற்றிலும் ஆண்களே உட்கார்ந்து விட்டால், பிறகு பெண்கள் சிறு குழந்தைகளோடு, கர்ப்பஸ்திரீகளோடு வயதானவர்களும், என் மாதிரி உள்ளவர்களும், அந்தப் பைப்பைப் பிடித்துக்கொண்டே நின்று கொண்டிருப்பது நியாயமே இல்லை. ஆகவே, ஒரு பகுதியை அது பெண்கள் சீட் என்று ஒதுக்கி விடுவோமேயானால், பெண்கள் வரும்போது, ஆண்கள் எழுந்து கொள்ளலாம். அப்பேர்ப்பட்ட நடவடிக்கை எடுத்து, பெண்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்களுக்கு வந்த குற்றச்சாட்டு, முற்றிலும் பெண்களே உட்கார்ந்து கொண்டு, ஆண்களை உட்கார விடமாட்டோம் என்கிறார்கள் என்பதுதான். *(சிரிப்பு).*

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, மகளிருக்கென்று அது மஃபஸல் பஸ் ஆக இருந்தாலும், நகரப் பேருந்தாக இருந்தாலும், இட

ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதிகப்படியான மகளிர் பயணம் செய்கின்ற வழித் தடங்களில், நிச்சயமாக ஆண்கள் ஒத்துழைப்பார்கள் என்று கருதுகிறோம்.

டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில், அந்த இருக்கைகளிலும் 30 சதவிகிதம் என்று அறிவித்து, முடிவு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படியானால், 30 சதவிகிதத்திற்கு அதிகமாக வந்தால் என்ன செய்வது ?

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளிலே, கல்விக் கூடங்களுக்குச் செல்கிறவர்களும், வேலைக்குச் செல்கின்ற பெண்மணிகளும் அதிகரித்துக் கொண்டு வருகின்ற காரணத்தாலே, அதிலே பெண்களுக்கான இருக்கைகள் மிகவும் குறைவாக இருப்பதால் அவர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். அது பட்டணக்கரையில் மட்டுமல்ல, பட்டிக்காட்டுப் பகுதியிலும் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, ஒரு பகுதி ஆண்களுக்கும், ஒரு பகுதி பெண்களுக்கும் என்கிற நிலை வந்தால், கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தைகள் வைத்திருப்பவர்கள் எல்லாம் சிரமப்படாமல் பயணம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு வழிமுறையைக் கடைப்பிடிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு சிவபெருமான் திட்டம் என்று பெயர். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படி மகளிர் பயணம் செய்யக்கூடிய வழித் தடங்களில் எங்கெங்கு அதிகமாக நெருக்கடி இருக்கின்றதோ, அந்த வழித் தடங்களில் கூடுதல் இருக்கைகள் ஒதுக்கப்படுவதற்கு போக்குவரத்துக் கழகங்கள் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

சென்னை திருவள்ளுவர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்.

*11895—திரு. செங்கை சிவம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை திருவள்ளுவர் பேருந்து நிலையத்தில் மிக இட நெருக்கடி உள்ளதால், இதை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா ?